## திராவிடத்தால் வாழ்கிறோம்

930

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## இது பெரியார் மண்

ர.பிரகாசு

23

பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.

# ‘திராவிடப் பெருங்கோட்டை’ பெருவளப்பூர்!



அருணாச்சலம் – உஷா திருமணத்தில் பெரியார், அண்ணா, குன்றக்குடி அடிகளார்.

அரசியல் சட்ட எரிப்புப் போராட்டத்தில் பங்கேற்று, லால்குடியைச் சுற்றியுள்ள கிராமங்களில் இருந்து 349 பேர் கைதாகியிருந்தனர். சட்ட எரிப்புப் போராளிகளால் நிரம்பியிருந்த கோவை சிறையில், திருவெறும்பூரைச் சேர்ந்த சவரிமுத்துவும் ஒருவர். சிறு குழிவெட்டி அதில்தான் சிறுநீர், மலம் கழிக்க வேண்டும். தரமான உணவும் கிடையாது. ஆனாலும், மாலை நேரங்களில் கொள்கை உரையாடலுக்குப் பஞ்சமிருக்காது. அத்தகைய உரையாடலின் போது, “எனது மகள் லீலாவுக்கு சாதி மறுப்புத் திருமணம்தான் செய்வேன்” எனக் கூறியுள்ளார் சவரிமுத்து.

அப்படியானால், தானே திருமணம் செய்துகொள்வதாகச் சொன்னார் பெருவளப்பூர் சிதம்பரம். அதன்படி, 1966–ஆம் ஆண்டு திருச்சி பெரியார் மாளிகையில், பெரியார் தலைமையில் லீலா- சிதம்பரம் திருமணம் நடைபெற்றது. இடைவிடாத இயக்கப் பணிகளால் பெரியாரை அடிக்கடி சந்திப்பதும் பேசுவதும் சாமிநாதனுக்கு வழக்கமானது. தனது சகோதரர் அருணாச்சலத்திற்கு உறவினர்கள் பலர் பெண் கொடுக்க முன்வந்தாலும், சாதி மறுப்புத் திருமணம்தான் செய்ய வேண்டும் என்று உறுதியோடு இருந்தார் சாமிநாதன். 1966–ஆம் ஆண்டில் அருணாச்சலத்தை, பெரியார் மாளிகைக்கு அழைத்துச்சென்று பெரியாரிடம் அறிமுகப்படுத்தி, பெண் இருந்தால் சொல்லுமாறு கேட்டார். அருணாச்சலம் தீவிர தி.மு.க. தொண்டர், கலைஞர் பற்றாளர்.



பொதுவுடைமை இயக்கத் தலைவர் ஜீவா மறைந்து, அப்போது 3 ஆண்டுகள் ஆகியிருந்தன. ஜீவாவின் மனைவி பத்மாவதி அம்மையார் அவருடைய மகள்களுக்குத் திருமணம் செய்வது தொடர்பாகப் பெரியாரிடம் கூறி, மணமகன் இருந்தால் சொல்லச்சொன்னார். இருவீட்டாரையும் சம்மதிக்கச் செய்து, ஜீவாவின் மூத்த மகள் உஷாவிற்கும் அருணாச்சலத்திற்கும் திருமணத்தை உறுதி செய்தார் பெரியார்.

இதற்கிடையே 1967–ஆம் ஆண்டு மார்ச் 6 அன்று பேரறிஞர் அண்ணா தலைமையில், தி.மு.கழகம் முதன்முறையாக ஆட்சி அமைத்தது. ஆட்சியமைத்த கையோடு, திருச்சிக்குச் சென்று பெரியாரைச் சந்தித்து, 18 ஆண்டுகாலப் பிரிவுக்கு முற்றுப்புள்ளி வைத்தார் அண்ணா. ஜூன் 7–ஆம் தேதி புத்தூர் பெரியார் மாளிகையில் அருணாச்சலம் – உஷா திருமணம். அந்த திருமண விழாவில் பெரியாருடன், தமிழ்நாட்டின் முதலமைச்சராக அண்ணாவும் கலந்துகொண்டார். திருமண அழைப்பிதழில், மணமகன் குடும்பம் சார்பில் பெரியார் பெயரும், மணமகள் குடும்பம் சார்பில் இந்திய பொதுவுடைமைக் கட்சியின் மாநில செயலாளர் மணலி கந்தசாமி பெயரும் இடம்பெற்றன.

அந்தத் திருமண விழாவில் அண்ணா பேசும்போது, “சுயமரியாதைத் திருமணங்களைச் சட்டப்பூர்வமாக அங்கீகரிக்கும் தீர்மானத்தை, சட்டசபையில் கொண்டு வருவேன்” என்று சூளுரைத்தார். அடுத்த சில மாதங்களில் செய்தும் காட்டினார். பொதுவுடைமைத் தலைவர் பி.இராமமூர்த்தி, தவத்திரு குன்றக்குடி அடிகளார், சாமிநாதனின் குடும்ப நண்பரான அன்பில் தர்மலிங்கம் எனப் பலரும் திருமண விழாவில் பங்கேற்றனர். (விருந்தினர்களுக்கு இரவு உணவையும் பெரியாரே வழங்கினார்). பெருவளப்பூரில் அதன்பிறகு நூற்றுக்கணக்கான சாதி மறுப்புத் திருமணங்களை நடத்திவிட்டார் சாமிநாதன்.

1971–இல் பெரியாரை வரவழைத்து, மன்றம் திறந்தார். மூட நம்பிக்கை ஒழிப்பு ஊர்வலம் நடத்தி, பெரியாருக்கு எடைக்கு எடை மிளகாய் வழங்கினார். 1953–இல் இருந்து 1980–ஆண்டு வரை சாமிநாதன்தான் பெருவளப்பூரின் ஊராட்சி மன்றத் தலைவராகப் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டார். அன்றிலிருந்து இன்றுவரை அங்கு தி.மு.க.-வைத் தவிர, வேறு கட்சி வென்றதில்லை. அந்த கருப்பு - சிவப்புக் கோட்டையைச் செதுக்கிய சிற்பி சாமிநாதன் என்ற வரலாறு, எதிரொலித்துக்கொண்டே இருக்கும்!

...பயணிப்போம்.

## ‘மனிதம் நமது அடையாளம்’, பரப்புரை இயக்கம்!




சாதி வன்கொடுமைகளுக்கு எதிராக, எப்போதும் ஒருமித்த குரல் கொடுக்கும் மாநிலம் தமிழ்நாடு. சமூகநீதி, சமத்துவச் சிந்தனைகளில் தமிழ்நாடு பல படிகள் முன்னேறி இருந்தாலும், அந்தச் சிந்தனையை வளர்த்தெடுக்கும் பணி என்பது தொடர்ச்சியானது. அந்த வகையில், சாதி வன்கொடுமைகளுக்கு எதிரான பிரச்சாரப் பயணத்தைத் தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் திராவிடர் விடுதலைக் கழகம், தற்போது தொடர் வாகனப் பிரச்சார இயக்கத்தைத் தொடங்கியுள்ளது.

‘சாதி ஒரு மனநோய்’ என்று குறிப்பிடுவார் அண்ணல் அம்பேத்கர். அந்த மனநோய்க்கு அடிப்படைக் காரணம் சாதியப் பெருமைதான். ஆனால், நவீன வளர்ச்சி, நவீன சிந்தனைப் போக்குகள், உலகளாவிய பார்வை என மனித சமூகம் வளர்ந்து கொண்டிருக்கும் நிலையில், சாதியப் பெருமையில் சிக்கி ஆளுமையைச் சிதைத்துக் கொள்ளும் மக்களை நோக்கி, ‘ஜாதி ஆணவம் நமக்கு அவமானம் - மனிதம் நமது அடையாளம்’ என தனது பயணத்தைத் தொடங்கியுள்ளது திராவிடர் விடுதலைக் கழகம்.

இதற்காக, ஆணவப் படுகொலையால் பலியானவர்களின் புகைப்படங்களுடன் மேடை அமைப்பு கொண்ட பிரச்சார வாகனத்தை வடிவமைத்துள்ளனர். 12.08.2025 அன்று, இந்தப் பிரச்சாரப் பயணத்தைத் தொடங்கி வைத்துள்ளார், அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன். சென்னை, திருப்பூர், கோவை, பொள்ளாச்சி என தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் பரப்புரைக் கூட்டங்கள் நடைபெற இருக்கின்றன. ‘மனிதம் நமது அடையாளம்’ என்பதை முழு முற்றாக நம்பட்டும் தமிழ்நாடு!

## ப்ளாஷ்பேக்





எம்.பக்ருதீன்

### மேடையில் தலைவருடன் நிற்கும் வாய்ப்பு!

2013–ஆம் ஆண்டு, அதிராம்பட்டினம் நகரத்துக்கு, திருமண நிகழ்வுக்கு வருகை தந்திருந்த, இன்றைய கழகத் தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் மேடையில் இருக்கும் வாய்ப்பு அமைந்தது. என்னைப் போன்ற எளியத் தொண்டர்களுக்கும் கிடைத்த வாய்ப்பு என உணர்வளிக்கும் படம்.

– எம்.பக்ருதீன்,
20–வது வார்டு கவுன்சிலர்,
தஞ்சை தெற்கு மாவட்டப் பிரதிநிதி,
அதிராம்பட்டினம்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை – 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

73

``கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்...''



# அரசு திசைமாறாது! தீர்வு எட்டப்படும்!

**தூய்மைப் பணியாளர்களுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளை மீறி, சென்னை மாநகராட்சியில் தி.மு.க. அரசு செயல்படுவதாக குற்றச்சாட்டு முன் வைக்கப் படுகிறதே?**

சென்னை மாநகராட்சியில், 15 மண்டலங்கள் உள்ளன. இவற்றில் 11 மண்டலங்களில் கடந்த அ.தி.மு.க. ஆட்சியிலேயே பொது-தனியார் பங்களிப்பு (PPP) முறைமையிலான திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் தொடங்கிவிட்டன. தற்போது, மண்டலம் 5-இராயபுரம், மண்டலம் 6-திரு.வி.க.நகர் ஆகியவற்றில் இதே முறையில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் மேற்கொள்ளப்படும் நிலையில், இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, அந்த மண்டலங்களின் தூய்மைப் பணியாளர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

திராவிட நாயகர் மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு, எப்போதும் விளிம்புநிலை மக்கள் பக்கம் நிற்கும் அரசாகும்.

கொரோனா பேரிடர் காலத்தில், தங்கள் உயிரையும் துச்சமென மதித்து பொதுச்சேவையாற்றிய தூய்மைப் பணியாளர்களை முன்களப் பணியாளர்கள் என அறிவித்து, அவர்களுக்கான ஊக்கத் தொகையை வழங்கியவர் மாண்புமிகு முதலமைச்சர். அதுபோல, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், தூய்மைப் பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி, எப்போதும் துணை நிற்பவர். தற்போது, சென்னை மாநகராட்சியின் இரண்டு மண்டலங்களில் தங்கள் கோரிக்கையை முன்வைத்துப் போராடும் தூய்மைப் பணியாளர்களுடன் அரசு சார்பில், 12 சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளன.

சுயஉதவிக் குழுக்கள் மூலமாக மாநகராட்சி வேலைகளில் ஈடுபட்டு வந்த தூய்மைப் பணியாளர்கள், பொது-தனியார் முறைமையின்படி தனியார் நிறுவனத்தின் பணியாளர்களாக மற்ற மண்டலங்களில் மாற்றப்பட்டது போலவே, இந்த இரு மண்டலங்களின் நிலைமையும் இருக்கும் என்றும், தொழிலாளர் சட்ட விதிமுறைகளுக்குட்பட்ட பணியாளர்களாகத் தூய்மைப் பணியாளர்கள் மாறுவதால், அவர்களுக்குப் பணிப் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டு, பி.எஃப்-ஈ.எஸ்.ஐ-இன்சூரன்ஸ்- போனஸ்-கல்வி மற்றும் திருமண உதவித் தொகை-பணமாக மாற்றும் வசதியுடன் கூடிய விடுப்பு நாட்கள் ஆகியவை கிடைக்கும் என அரசுத் தரப்பில் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

அரசும் மாநகராட்சி நிர்வாகமும் உத்தரவாதமளித்துள்ள நிலையிலும், தூய்மைப் பணியாளர்கள் சார்பில் உயர்நீதி மன்றத்திலும் தீர்ப்பாயத்திலும் முறையீடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த முறையீடுகளில் அளிக்கப்படும் தீர்ப்புகள்-முடிவுகளின் அடிப்படையில் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அரசின் சார்பில் உறுதியளிக்கப்பட்டுள்ளது. சுயஉதவிக் குழுக்களின் சார்பில், ஏற்கனவே பணியாற்றி வரும் தூய்மைப் பணியாளர்களை, தனியார் நிறுவனம் அப்படியே ஏற்றுக்கொண்டு, அவர்களுக்குரிய பலன்கள் அனைத்தும் கிடைத்திட மாநகராட்சி நிர்வாகமும் உறுதி செய்துள்ளது. இதை அறியாமலும் அறிந்திருந்தும் திசை திருப்பும் வகையிலும், தி.மு.கவின் அரசியல் எதிரிகளும் அவர்களுடன் சில உதிரிகளும் தங்களுக்கு ஏதாவது அரசியல் ஆதாயம் கிடைக்குமா என குப்பையைக் கிளறிப் பார்க்கிறார்கள். அவர்கள் ஏமாறப்போவது நிச்சயம். ஏனென்றால், தி.மு.கழக அரசு, உழைக்கும் மக்களின் அரசு. உழைக்கும் மக்களின் பக்கமே நிற்கும் என்பதில் ஐயம் வேண்டாம்.

...வினா தொடரும்.

## கருவூலம்

### தி.மு.கழக சட்டமன்றக் குழு!

1957–ஆம் ஆண்டு, சட்டமன்றத் தேர்தலில் 15 பேர் வெற்றி பெற்ற நிலையில், மார்ச் 31–ஆம் தேதி, சென்னை சட்டமன்ற தி.மு.க. உறுப்பினர்கள் அறிவகத்தில் கூடினர். தி.மு.கழக சட்டமன்றக் குழுத் தலைவராக பேரறிஞர் அண்ணா, துணைத் தலைவராக பேராசிரியர், சட்டமன்றக் கொறடாவாக கலைஞர், செயலாளர்களாக ஏ.கோவிந்தசாமி, எம்.பி.சுப்பிரமணியம் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131